# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213011

1. District : மாவட்டம் Vellore | PS: காவல்நிலையம் Vigilance & Anti-corruption | Year: ஆண்டு 2023 | FIR No.: மு.த.அ. எண் 7/2023 | Date: நாள் 14.10.23

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7(a) of PC (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 04.10.2023 — Date to : நாள் வரை 10.10.2023
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.10.2023 — Time : நேரம் 12.30 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-II 2023 — Time : நேரம் 14.10.2023 12.30 hrs & 14.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — O/o the Junior Engineer, TNEB, Melpatti, Gudiyatham Taluk, Vellore District
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி — Northwest about 40 kms
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.G. Siva — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Govindasamy
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 56/2023 — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Agriculture & Business — (g) Address : முகவரி No. 3/19, Mel Street, Pallalakuppam Village & post, Gudiyatham Tk, Vellore Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. V. Madhan, Commercial Inspector, O/o The Junior Engineer, TNEB, Melpatti, Gudiyatham Taluk, Vellore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   After conducting preliminary verification case registered.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M G I Sive 14-10-2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14.10.2023 @ 16.00 hrs

Name: பெயர் ............S. VIJAY,
Rank: நிலை .....................No. எண் ........
INSPECTOR OF POLICE,
VIGILANCE & ANTI-CORRUPTION,
VELLORE.

<u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது:-</u> வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.விஜய் ஆகிய நான் 14.10.2023-ஆம் தேதி பகல் 12.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் M.G. சிவா, த/பெ. கோவிந்தசாமி, எண்.3/19, மேல் தெரு, பல்லாலகுப்பம் கிராமம் மற்றும் அஞ்சல் மேல்பட்டி வழி, குடியாத்தம், வேலூர் மாவட்டம் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் M.G.சிவா, வயது. 56/2023 த/பெ. கோவிந்தசாமி, எண்.3/19, மேல் தெரு, பல்லாலகுப்பம் கிராமம் மற்றும் அஞ்சல் மேல்பட்டி வழி, குடியாத்தம், வேலூர் மாவட்டம். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், லஞ்ச ஒழிப்பு துறை, வேலூர், வேலூர் மாவட்டம் அய்யா, நான் வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுக்கா பல்லாலகுப்பம் கிராமத்தில் என்னுடைய குடும்பத்துடன் வசித்து வருகிறேன். என்னுடைய மனைவி பெயர் சுந்தரி. எங்களுக்கு நான்கு பிள்ளைகள் முதல் மகன் பெயர் ராஜ்குமார், இரண்டாவது மகள் பானுபிரியா, மூன்றாவது மகள் பபிதா, கடைசி மகன் ருபன்குமார். அனைவருக்கும் திருமணமாகி தனித்தனியாக வசித்து வருகிறார்கள். என் பெயரில் பல்லாலகுப்பம் கிராமத்தில் சுமார் 20 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. மேலும் என்னுடைய வீட்டிற்கு பக்கத்திலேயே பங்க் கடை ஒன்றும், இட்லி தோசை மாவு அரைக்கும் இயந்திரம் ஒன்றும் கேழ்வரகு, கோதுமை, அரிசி அரைக்கும் இயந்திரம் ஒன்றும் வைத்துள்ளேன். மேற்படி விவசாயத்தின் மூலமும், கடையில் வரும் வருமானத்தினை கொண்டும் ஜீவனம் செய்தும் வருகிறேன். என்னுடைய மகன்கள் இருவரும் PSR கூல்டிரிங்ஸ் என்ற பெயரில் எங்கள் கிராமத்தில் கூல்டிரிங்ஸ் தயார் செய்யும் கம்பெனி வைத்து தொழில் செய்து வருகிறார்கள். மேற்படி பல்லாலகுப்பம் கிராமத்தில் உள்ள என்னுடைய மாவு அரைக்கும் கடை மற்றும் பெட்டி கடையில் இரண்டு கமர்சியல் மின் இணைப்புகள் என் மனைவி சுந்தரி பெயரில் உள்ளது. அதில் ஒரு மின் இணைப்பினை கமர்சியல் மின் இணைப்பிலிருந்து சிறுதொழில் மின் இணைப்பாக மாற்றுவதற்காக என் மனைவி சுந்தரி பெயரில் கடந்த 21.09.2023 அன்று ரூ.242/- செலுத்தி ஆன்லைனில் அப்ளை செய்தேன். அன்றைய தினமே மேல்பட்டி EB ஆபீஸ் சென்று JE அவர்களை பார்த்தேன் அவர் அருகில் இருந்த கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் அவர்களிடம் கொடுக்க சொன்னார் நான் பக்கத்தில் உள்ள அறையில் இருந்த திரு.மதன் கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் அவர்களை சந்தித்து ஆன்லைன் மனு மற்றும் என் மனைவி பெயரில்

உள்ள மாவு அறைக்கும் கடைக்கான சிறு குறு தொழில் பதிவு சான்று ஆகியவற்றை கொடுத்தேன் அதனை வாங்கி கொண்டு சரி நான் பார்த்துகொள்கிறேன் என்று சொன்னார் நான் அங்கிருந்து புறப்படுவத்றகு முன்னர் திரு.மதன் அவர்களின் செல்போன் நம்பர் கேட்டேன் அவர் நம்பர் கொடுத்தார். அதன் பின்னர் 26.09.2023 அன்று நான் என்னுடைய செல்போன் 8870824991 நம்பரில் இருந்து திரு.மதன் அவர்களின் செல்போன் 9994746990 நம்பருக்கு பேசினேன் அப்போது நான் நேரில் வந்து பார்க்கிறேன் என்று சொன்னார் ஆனால் வரவில்லை. அதன்பின் மீண்டும் 04.10.2023 காலை சுமார் 10.30 மணிக்கு நான் திரு.மதன் அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டேன் அவர் அன்றைய தினம் கண்டிப்பாக என்னுடைய கடைக்கு நேரில் வந்து மின் இணைப்பு மாற்றுவது சம்மந்தமாக பார்ப்பதாக சொன்னார் ஆனால் மதியம் சுமார் 3 மணி வரை வரைவில்லை அதனால் மீண்டும் திரு.மதன் அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டேன் அதற்கு அவர் சுமார் 10 நிமிடத்தில் வந்துவிடுவதாக சொல்லி என் கடைக்கு வந்து மின் இணைப்பினை பார்த்துவிட்டு வேலையை முடித்து கொடுக்கிறேன் காசு ரெடியாக உள்ளதா என்று கேட்டார், அதற்கு நான் என்ன காசு சார் என்று கேட்டதற்கு உன்னுடைய மின் இணைப்பை மாவு அறைக்கும் சிறு குறு தொழில் மின் இணைப்பாக மாற்றி கொடுக்கவும் மின் இணைப்பை அதன் இருக்கும் இடத்தில் இருந்து பக்கத்தில் உள்ள கடையில் பொறுத்தவும் மொத்தம் ரூ.6,000/-ம் கொடுக்க வேண்டும் என்றார், அதற்கு நான் சார் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை நான் கஷ்டத்தில் உள்ளேன் மின் இணைப்பு மீட்டரை இடம் மாற்றி அமைக்க ஆன்லைன் பீஸ் 2000/-ம் தான் செலுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள் என்றேன் அதற்கு அவர் கடையின் மின் இணைப்பினை சிறு குறு தொழில் மின்பாக மாற்ற ரூ.1,000/-மும் மின் இணைப்பு மீட்டரை இடம் மாற்றி கொடுக்க நீ ஆன்லைனில் அப்ளை செய்ய வேண்டாம் ரூ.5,000/-ம் என்னிடம் கொடுத்துவிட்டால் நானே ஆள்வைத்து மாற்றி கொடுக்கிறேன் என்றார். அதற்கு நான் சார் பீஸ் ரூ.2,000/-ம் தான் ஆகிறது நீங்கள் 5,000/-ம் கேட்கிறிர்களே என்றேன் அதற்கு அவர் சரி மின் இணைப்பு மீட்டரை எந்த இடத்திற்கு வேண்டுமோ அந்த இடத்திற்கு நீயே ஆள்வைத்து கட்டை அடித்து செய்ய வேண்டிய வேலைகளை செய்து முடி நான் கனெக்ஷன் மட்டும் வந்து கொடுத்து விடுகிறேன் அதற்கு ரூ.3,000/-ம் கொடுத்தால் போதும் என்றார் ஆக மொத்தம் மின்

இணைப்பினை கடை கனெக்ஷனில் இருந்து சிறு குறு தொழில் கனெக்ஷனமாக மாற்ற ரூ.1,000/-மும் மின் இணைப்பு மீட்டரை இடம்மாற்றி வைக்க ரூ.3,000/-ம் ஆக மொத்தம் ரூ.4,000/-ம் கொடு அது மட்டும் இல்லாமல் பீஸ் ஏதாவது வந்தால் அது தனியாக கட்டவேண்டும் என்று சொன்னார் எனக்கு பணம் கொடுக்க விருப்பமில்லை அதனால் பின்னர் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டேன். அதன் பின்னர் 10.10.2023 அன்று காலை மேல்பட்டி EB ஆபீஸ் சென்று திரு.மதன் அவர்களை சந்தித்து மின் இணைப்பு மாற்றாமல் உள்ளது சம்மந்தமாகவும் மின் இணைப்பு மீட்டரை மாற்றி வைப்பது சம்மந்தமாக கேட்டேன் அதற்கு அவர் ரூ.4,000/-ம் கொடு நான் ஏற்பாடு செய்து கொடுக்கிறேன். ரூ.1,000/-ம் மின் இணைப்பு மாற்றவும் ரூ.3,000/-ம் மின் இணைப்பு மீட்டரை மாற்றி வைக்கவும் மொத்தம் ரூ.4,000/-ம் லஞ்சமாக கேட்டார் அதனை நான் என்னுடைய செல்போனில் பதிவு செய்து வைத்துள்ளேன். நான் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகைகளை செலுத்த தயாராக உள்ளேன் ஆனால் என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.4,000/-ம் கேட்கும் திரு.மதன் கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் மின்சார அலுவலகம் மேல்பட்டி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் மின் இணைப்பு மாற்றுவதற்கு ஆன்லைனில் அப்ளை செய்ததற்கான ரசீதினையும், சிறுதொழில் சான்றிதழையும் இத்துடன் இணைத்துள்ளேன். Sd/- xxxxxxxxx (M.G.Siva) 14=10=2023

Sir,

Received the complaint on 14.10.2023 at 12.30 Hrs, after verifying the antecedents of the accused and credibility of the complainant by way of conducting confidential enquiry, with the permission of DVAC, Chennai on 14.10.2023 at 14.45 Hrs registered a case in Vellore V&AC Cr.No.07/2023 U/s. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act 2018. Sd/- xxxxxxxxx 14.10.2023 (S.Vijay) INS/VAC/VL.

The FIR in original along with the complaint with enclosures was sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the other copies to the officers concerned.

**Enclosures :**

1) Tamil typed written Complaint of M.G.Siva, Dated 14.10.2023.

2) Attested copy of online payment receipt for change of EB tariff and along with MSME certificate. (5 sheets)

3) 'hp' DVD-R 16 X compact disc contains audio conversation along with certificate u/s. 65-B of Indian Evidence Act-1872.

(S.VIJAY) 14/10/2023
INS/VAC/VLR.